**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் - 2018**

சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 5792–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 பீ (3) ஆம் உறுப்புரை பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமுதாயத்தின் பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் நன்மைகளிற்காகவும் இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களிலுள்ள சூழல் தொகுதி முகாமைத்துவத்தின் நிலையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்ப நில அளவீட்டு திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாடு மற்றும் மனித – யானை சகவாழ்வு மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேச முகாமைத்துவம் தொடர்பான நிறுவக ரீதியான இயலளவுகளை முன்னேற்றுதல் போன்ற பெயரிலான மூன்று பிரதான கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,504.75 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கை மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கியிருக்காததன் விளைவாக செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் செயன்முன்னேற்றத்தை கணக்காய்வின் போது கண்காணிக்க முடியதாதிருந்தது. | செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை ஒப்பீடு செய்வதற்கான கண்காணிப்பு பொறிமுறை காணப்படாமை | கருத்துரை வழங்கப்படவில்லை. | மீளாய்வு செய்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் செயன்முன்னேற்ற அறிக்கை இணங்குதல் வேண்டும். |

### 2.2 வழமைக்கு மாறான செயற்பாடுகள்/ செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் சுற்றுலா விடுதிகளின் பயன்பாட்டிற்காக உபகரணங்கள் மற்றும் பாத்திரங்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 6.15 மில்லியன் தொகை செயற்திட்ட | செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தை மீறிச் செயற்படுதல். | வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு இவ் விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் குறுகிய காலப்பகுதியினுள் உரிய பதில்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் செயற்திட்ட நோக்கெல்லையை கடுமையாக்குவதற்கு இரண்டு அமுல்ப்படுத்தல் முகவர்களிற்கும் தேவையான அறிவுறுத்தல்கள் | செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிதி பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பாடுகளின் நோக்கெல்லைக்கு அப்பால் காணப்பட்டன. | | வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | களத்தில் ஈடுபடும் பதவியணியினர் பயன்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 112.50 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் அமுல்ப்படுத்தல் முகவர் மற்றும் சனாதிபதி செயலகத்தின் உத்தியோகத்தர்களிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏனைய நோக்கங்களிற்காக செயற்திட்ட சொத்துக்களை பயன்படுத்துதல் | இரண்டு அமுல்ப்படுத்தல் முகவர்களினதும் இயலளவை முன்னேற்றும் நோக்கில் கள கடமைகளிற்காக அவ் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிஎம்யூ இற்கு மாற்றப்பட்டிருந்தன. | உரிய நோக்கங்களிற்காக செயற்திட்டத்தின் சொத்துக்கள் பயன்படுத்தப்படுவைத உறுதிப்படுத்துதல் வேண்டும். |

**2.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| சுற்றாடல் பாதுகாப்பு நோக்கங்களிற்குரிய 08 தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து ஒளிபரப்புச் செய்வதற்காக தனியார் தரப்பொன்றிற்கு ரூபா 7.24 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 5.40 மில்லியன் கிரயத்தில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைக்கப்பட்ட நன்மைகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் 2019 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்புவதற்கு எதிர்பார்க்கின்றதுடன் நிதி உதவி கோருவதற்கான செயற்திட்ட முன்மொழிவொன்று பிஎம்யூ இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளுதல் வேண்டும். |

## 2.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| வாடகைக்கு பெற்ற கட்டிடமொன்றை பராமரிப்பதற்கு உரிமையாளருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாமல் ரூபா 3.14 மில்லியன் கிரயம் செலவிடப்பட்டிருந்தது. | பயனற்ற செலவினங்கள் | பிஎம்யூ 2018 மார்ச் 28 இல் கட்டிட உரிமையாளருடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. இவ் விடயம் தொடர்பாக பிஎம்யூ ஈடுபட்டுள்ளதுடன் எதிர்கால வாடகைக் கொடுப்பனவுகளிலிருந்து இப் பராமரிப்புக் கிரயத்தை கழிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | சிக்கல்கள் மற்றும் வீணான செலவினங்களை தவிர்ப்பதற்காக வாடகை உடன்படிக்கையின் உட்பிரிவுகளை பின்பற்றுதல் வேண்டும். |